BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# நகரின் பொது உபயோக கட்டிடங்களைப் பாதுகாப்புடன் திறக்கவும் சேவைகளை மறுபடி துவக்கவும் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் தயாராகிறது.

ப்ராம்ப்ட்டன், ON (ஆகஸ்ட் 26, 2020) – செப்டம்பர் 9 ஆம் தேதி துவங்கி, சிட்டி ஹால் உள்ளிட்ட நகரின் பெருநிறுவன பொது உபயோகக் கட்டிடங்களை பொது மக்களின் பயன்பாட்டிற்காக முன்பதிந்த சந்திப்பு பதிவு செய்துகொள்வதன் பேரில், மீண்டும் திறக்கவிருக்கிறது. சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உதவிகரமாக இருக்க, போகிறபோக்கில் வரும் எவரும் வராமல் இருப்பதற்காக இந்த அனைத்து கட்டிடங்களும் மூடப்பட்டே இருக்கும்.

செப்டம்பர் 16 ஆம் தேதி துவங்கி, கவுன்சிலின் சேம்பர் கட்டிடத்தில் பொதுமக்கள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள்; இது முன் பதிவின் பேரில் 50 பேர் மட்டுமே கலந்துகொள்ளும் வகையில் அனுமதிக்கப்படும். அனைத்து கமிட்டி மற்றும் நகர கவுன்சில் கூட்டங்களிலும் கலந்துகொள்ள, ஆவணங்கள் சமர்ப்பிக்க மற்றும் பிரதிநிதித்துவம் வகிக்க, நகர நிர்வாகம் ஆன்லைன் விருப்பத்தெரிவுகளை தொடர்ந்து வழங்கி வரும்.

பொதுமக்கள் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும் சேவைகள், மற்றும் முன் பதிந்த சந்திப்பு பதிவு செய்யும் செயல்முறை பற்றிய விபரங்கள், வரவிருக்கும் நாட்களில் நகரின் வலைத்தளத்தில் கிடைக்கப்பெறும். வருகை தரும்போது எதையெல்லாம் எதிர்பார்க்கலாம் மற்றும் பொதுமக்களை பாதுகாப்பாக வைத்திருக்க நகர நிர்வாகத்தினர் என்ன செய்கிறார்கள் என்பது பற்றிய மேலும் விபரங்களுக்கு வருகை தரவும்: brampton.ca/reopening.

**பொழுதுபோக்கு மையங்கள்**

ப்ராம்ப்ட்டன் நகரின் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுதுபோக்கு பொது உப்யோக கட்டிட வசதிகள் முன்பதிந்த சந்திப்புக்களின் பேரில் மட்டுமே திறக்கப்படும். உள்ளரங்க நீச்சல் குளங்கள், உடற்தகுதி செய்துகொள்ளும் சாதன வசதிகள் மற்றும் குறைந்த அளவிலேயான பொது நிகழ்ச்சிகள் ஆகியவை (செப்டம்பர் 7 ) தொழிலாளர் தினத்திற்கு பின்னரே மீண்டும் துவங்கும். தொழிலாளர் தினத்திற்கு பின்னர் மீண்டும் துவங்க இருக்கும் அனைத்து நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகள், மற்றும் ஒரு இடத்தை முன்பதிவு செய்வது எப்படி என்பது உள்ளிட்ட மேலும் தகவல்கள் செப்டம்பர் 1 ஆம் தேதி www.brampton.ca/recreation எனும் வலைப்பக்கத்தில் கிடைக்கும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“இந்த நிலைக்கு வர எங்களுக்கு உதவிய நமது சமுதாயத்தினரின் முயற்சிகளுக்காக அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக. எச்சரிக்கையுடன் படிப்படியாக மீண்டும் திறப்பது, மற்றும் மக்கள் நேரில் பெற்றுக்கொள்ளும் சேவைகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதில் போதிய கவனம் செலுத்துவதன் மூலம் பொதுமக்களுக்கான நமது சுகாதார நிபுணர்களின் ஆலோசனையை நாங்கள் தொடர்ந்து பின்பற்றி

வருகிறோம். இது நம் அனைவருக்கும் ஒரு புதிய யதார்த்தம் என்ற போதிலும், பாதுகாப்பான மற்றும் தடையற்ற மாற்றமாக நம் அனைவருக்கும் அமைய நாங்கள் பணியாற்றி வருகிறோம்

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"மீண்டும் திறப்பதற்காக நடத்தப்பட்ட எங்கள் கருத்தாய்வின் மூலமாக, முடிந்தவரை ஆன்லைன் சேவைகளையே வழங்கவேண்டும் என 70% குடியிருப்புவாசிகள் விரும்புவதாக நாங்கள் கேள்விப்பட்டோம். பொது உபயோக கட்டிடங்களுக்கான அனுமதி, நிகழ்வுகள், பொதுமக்கள் ஆலோசனை என அனைத்துக்குமே, நமது சமூகத்தினர் மற்றும் வணிகர்களுக்கான பாதுகாப்பான ஆன்லைன் விருப்பத்தெரிவுகளையே நாங்கள் வழங்க முன்வருகிறோம். பாதுகாப்பான, அணுகக்கூடிய மற்றும் வசதியான வணிகம் செய்வதற்கான புதுப்புது வழிகளைக் கண்டுபிடிப்பதற்கு நாங்கள் தொடர்ந்து முன்னுரிமை அளிப்போம்; படிப்படியாக மீண்டும் திறக்கப்படும்போதே இதுவும் நடைபெறும்."

*- மார்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைமைப்பொறுப்பு, மேயரின் மீண்டும் திறத்தல் மற்றும் மீட்சிக்கான பணிக்குழு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"கடந்த சில மாதங்களாகவே, நமது பொது உபயோக கட்டிடங்களை மீண்டும் திறக்க நமது ஊழியர்கள் தயார் செய்து வருகின்றனர். உடல் ரீதியான சமூக விலகல் நடவடிக்கைகள், மேம்படுத்திய துப்புரவு செயல்முறைகள், அனைத்து ஊழியர்களுக்கும் தினசரி அடிப்படையில் தொற்று இருக்கிறதா எனக் கண்டறிதல் ஆகியவற்றைஅறிமுகம் செய்து, மற்றும் எட்ட இருந்தபடியே பணி செய்வதையும் ஊக்குவித்தோம். இந்த முயற்சிகள் அனைத்துமே நாங்கள் எங்கள் சமூகத்திற்கு வழங்கும் சேவையில் எந்தவித சமரசமும் செய்துவிடாமல் இருந்தபடி, பொது சுகாதார வழிகாட்டுதல்களுடன் இணங்குவதை உறுதிசெய்கிறோம்."

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**ஊடகத் தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca